# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1979/21 - 2016 අගෝස්තු මස 09 වැනි අඟහරුවාදා - 2016.08.09

*1979/21 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 21/1978* (X)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரிஎல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், GA 2232 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீ லங்கா இன்டநஷனல் புடிஸ்ட் அகடமி தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் காணப்படும் "தகவல் தொழில்நுட்பவியலில் விஞ்ஞான இளமாணி" என்னும் பதிவையும் அதன் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளையும் உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2016, சனவரி 06 ஆந் திகதிய 1948/11 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையைத் திருத்துகின்றேன்.

**அட்டவணை**

| நிரல் I<br>பட்டங்கள் | நிரல் II<br>பட்டங்களின் சுருக்கீடுகள் |
|---|---|
| தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தொலைத்தொடர்பில் தொழில்நுட்பவியல் இளமாணி | பிரெக் (ஐரி மற்றும் தொலைத்தொடர்பு) |

லக்ஷ்மன் கிரிஎல்ல,
உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள்
அமைச்சர்.

கொழும்பு,
*2016, ஓகத்து 08.*

*8- 658/1*

*ச.வ.பீ. 21/1978* (X).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரிஎல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பிவி 17745 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான கொழும்பு இன்டர்நஷனல் நோட்டிகல் அன்ட் இன்ஜீனிரிங் கொலேஜ் (பிரைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, I ஆம் நிரலில் காணப்படும் "தேவைகள் விநியோகங்கள் மற்றும் போக்குவரத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)" என்னும் பதிவையும் அதன் அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள அதனது நேரொத்த பதிவையும் உடனடுத்துப் பின்வருவதனை சேர்ப்பதன்மூலம் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2013 ஆம் ஆண்டு யூலை 09 ஆந் திகதிய 1818/7 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை இக்கட்டளை மூலம் திருத்துகின்றேன்.*

**அட்டவணை**

| *நிரல் I*<br>*பட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களின் சுருக்கீடுகள்* |
|---|---|
| ஆங்கிலத்தில் கலை இளமாணி | பி ஏ ( ஆங்கிலம்) |

லக்ஷ்மன் கிரிஎல்ல,
உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள்
அமைச்சர்

கொழும்பு,
*2016, ஓகத்து 08.*

*8- 658/2*